بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 7:3 துல்ஹஜ் 1431, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

## பெரும்பாலான தமிழக முஸ்லிம்கள் வெளிநாட்டு வாழ்கையை தேர்ந்தெடுப்பதேன்?

*- ஷேக் சிந்தா மதார், துபாய்*

சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430) பதினொன்றாம் ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை

ஒரு மனிதன் ஏன் வேலைக்குப் போகிறான்? என்ற கேள்விக்கு, பணம் சம்பாதிக்க என்று இரண்டே வார்த்தைகளில் பதில் சொல்லி விடலாம். ஏன் வேலைக்குப் போகிறான்? என்றால், அதிகப் பணம் சம்பாதிக்க என்று பதிலளிக்க இயலும். கேள்வியில் ஒரு வார்த்தை அதிகமென்றால் பதிலிலும் ஒரு வார்த்தை அதிகம் என்பது, கணிதச் சமன்பாட்டுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாமேயன்றி, மனிதப் பயன்பாட்டுக்கு அவ்வளவாகப் பொருந்தி வராது. உள்ளே ஊடுருவிப் பார்க்கையில் மேலும் விரிவான பதில் தேவைப்படும்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழக முஸ்லிம்கள் மியான்மர் (பழைய பெயர் பர்மா), சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்குப் பிழைப்புத் தேடிச் சென்றதுண்டென்றாலும், 1970-களின் மத்தியில்தான் அதிகமான மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேல்நாடுகளுக்கும், தாய்லாந்து, ஹாங்காங் போன்ற கீழை நாடுகளுக்கும் சென்றவர்களைவிட, வளைகுடா நாடுகளுக்குச் சென்றவர்கள் மிக அதிகம்.

### விழுந்துவிடாத விட்டில்கள்:

விமானப் பயணம் சாதாரண மனிதனின் சக்திக்கப்பாற்பட்டதாக இருந்த அந்தக் காலத்தில் மக்கள் கடல் மார்க்கமாகப் பயணித்து வெளிநாடுகளுக்குச் சென்றனர்.

அவர்கள் சில ஆண்டுகளுக்குப்பின் விடுமுறையில் வந்த சமயம் சிலர் மிக ஆடம்பரமாக உடை உடுத்தவும் கம்பீரமாக நடந்து கொள்ளவும் முயல, அவற்றைப் பார்த்த மற்றவர்களுக்கு, வெளிநாட்டு

*தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க ...*

## துல்ஹஜ் மாதத்தின் முந்திய பத்து நாட்களின் சிறப்புகளும், உழ்ஹிய்யாவின் சட்டங்களும்

### சிறப்புகள்

1. துல்ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யக்கூடிய நல் அமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களில் செய்யும் நல் அமல்களும் அல்லாஹ்விற்கு மிகப்பிரியமானவைகளாக இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவுமா? என நபித்தோழர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவும்தான், ஆனால் அல்லாஹ்வின் பாதையில் பொருளையும், உயிரையும் அர்ப்பணித்து வீரமரணம் அடைந்தவரைத் தவிர என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: புகாரி
2. நாட்களில் மிகச்சிறந்த நாள் அரபாவுடைய நாள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் இப்னு ஹிப்பான்)

### உள்ளே!

சீரழிய சினிமா பாருங்கள் – 2
இஸ்லாத்தில் எச்சரிக்கப்பட்ட பாவங்களும் தண்டனைகளும் – 3
இந்தியாவில் வசிப்பது காஸ்ட்லி சமாச்சாரம் – 5
யுவான் ரிட்லி துணிச்சலின் மறுபெயர் - 9
மினா – அரஃபா மெட்ரோ ரயில் தயார் – 11
இறை நினைவுகள் - 12
அறிவுப் போட்டி - 12

### அரஃபா நோன்பு

அரஃபா நோன்பு (நோற்பவருக்காக) அந்த நாளுக்கு முந்திய வருடத்தின் பாவங்களையும், அதற்கு பின்னுள்ள வருடத்தின் பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான் என நான் நம்புகின்றேன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

**குறிப்பு:- அரஃபா நோன்பை ஹாஜிகள் நோற்கக்கூடாது, ஹஜ் செய்யாதவர்கள் இந்த நோன்பை நோற்பது மிகவும் சிறந்தது.**

அரஃபா தினத்தன்று அரஃபாவில் தங்கியிருந்த நபி(ஸல்) அவர்கள் தன்னிடம் கொண்டுவந்த பாலை அருந்தி தான் நோன்பு நோற்கவில்லை என்பதை மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம்)

### தக்பீர் கூறுவது

கடமையான தொழுகைகளுக்குப் பின்னரும், பள்ளிவாசல், வீடு, கடைவீதி போன்ற எல்லா இடங்களிலும் தக்பீர் கூறுவது,

துல்ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யக்கூடிய நல்அமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களில் செய்யும் நல் அமல்களும் அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமானவைகளாக இல்லை. ஆகவே லாஇலாஹா இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்து லில்லாஹ் போன்ற திக்ருகளை அதிகமாக செய்யுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

பெருநாளைக்காக கூறக்கூடிய தக்பீரை அரஃபா நாளின்

ஸுப்ஹு தொழுகையிலிருந்து பிறை 13ம் நாள் அஸ்ர் தொழுகை வரைக்கும் கூறுவது.

### உழ்ஹிய்யா

உழ்ஹிய்யா என்பது ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்கு பின் இறை திருப்தியை நாடி அறுக்கப்படும் பிராணிக்கு சொல்லப்படும், இது நபியவர்கள் வலியுறுத்திய சுன்னத்தாகும்.

கொம்புள்ள, கருப்பு நிறம் கலந்த இரண்டு வெள்ளை நிற ஆடுகளை நபி(ஸல்) அவர்கள் உழ்ஹிய்யாவாக கொடுத்தார்கள், அப்போது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறி அவ்விரண்டின் ஒரு பக்கத்தின் மீது தனது காலை வைத்து கையால் அறுத்தார்கள். (புகாரி)

### உழ்ஹிய்யா கொடுப்பதற்கு தகுதியான பிராணிகள்

- ஆடு, மாடு, ஒட்டகம் (புகாரி)
- ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆடு போதுமாகும் (திர்மிதி)
- மாட்டிலும், ஒட்டகத்திலும் ஏழு பேர்கள் பங்கு கொள்ளலாம். (திர்மிதி)
- உழ்ஹிய்யாவிற்கான கால்நடைகளில் கீழ்கண்ட குறைகள் இருக்கக்கூடாது

கண் குருடு, கடுமையான நோயானவை, மிகவும் மெலிந்தவை, நொண்டியானவை, அங்கங்கள் குறையுள்ளவை.

**குறிப்பு:- ஹாஜிகள் கொடுக்கும் குர்பானியும் இவ்வாறே இருக்க வேண்டும்.**

### நேரம்

ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகைக்கு பின் அறுக்க வேண்டும்.

யார் (பெருநாள்) தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அது அவரின் குடும்பத்தேவைக்காக அறுத்ததாக கணக்கிட்டுக்கொள்ளட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

யார் (பெருநாள்) தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அவர் இன்னும் ஒரு முறை குர்பானி கொடுக்கட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

### அறுக்கும் முறை

- ஆடு, மாடுகளை ஒருக்கணித்து படுக்கவைத்து அறுக்க வேண்டும். (முஸ்லிம்)
- ஒட்டகத்தை நிற்கவைத்து அறுபடும் நரம்புகள் வெட்டப்படும் அளவுக்கு அறுக்கும் கருவியால் கீறிவிடவேண்டும். (முஸ்லிம்)

அறுக்கும் போது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூற வேண்டும். (புகாரி)

### உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளை பயன்படுத்தும் முறை

உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளின் முடிகளையோ, தோல்களையோ, மாமிசங்களையோ அறுத்தவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது.

குர்பானி கொடுப்பதற்கான ஒட்டகங்களை மேற்பார்வை செய்வதற்கு என்னை நபி(ஸல்) அவர்கள் நியமித்தார்கள், அவைகளின் மாமிசம், தோல், ஆகியவற்றை தர்மமாகவே கொடுக்க வேண்டும் என்றும், அவற்றில் எதையும் அறுப்பவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது என்றும் கூறினார்கள், அறுப்பதற்குரிய கூலியை நாங்கள் தனியாகவே கொடுப்போம் என அலி(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

### உழ்ஹிய்யா கொடுப்பவர் செய்யக்கூடாதவைகள்

துல்ஹஜ் மாதம் பிறந்ததும் உழ்ஹிய்யா கொடுக்க நாடியவர் தன்னுடைய முடி மற்றும் நகத்திலிருந்து எதையும் அகற்றக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள். (முஸ்லிம்)

**குறிப்பு:- இத்தடை உழ்ஹிய்யா கொடுப்பவருக்கு மாத்திரம்தான், அவரின் குடும்பத்தினருக்கு அல்ல. ஹஜ்ஜுடைய ஹத்யு (குர்பானி) கொடுப்பவர்களுக்கும் இத்தடை கிடையாது.**

---

சீரழிய

# சினிமா பாருங்கள்!

வாழ்க்கையில் முன்னேற, 'டிவி' சீரியல், சினிமா, கிரிக்கெட் மேட்ச் பார்த்து நேரத்தை மாணவர்கள் வீணடிக்கக்கூடாது," என, கோவை மாநகர போலீஸ் கமிஷனர் சைலேந்திர பாபு பேசினார்.

தலைமைப்பண்பு திறன் வளர்ப்பு குறித்த கலந்துரையாடல், சரவணம்பட்டியில் உள்ள சங்கரா கல்லூரியில் நடந்தது.

கோவை போலீஸ் கமிஷனர் சைலேந்திரபாபு பேசியதாவது வேலை வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன வேலைக்கான தகுதியுள்ளவர்கள் குறைவாகவே உள்ளனர். இந்தியாவில் பட்டப்படிப்பு முடித்து வெளியேறும் மாணவர்களில் 80 சதவீதத்தினர் வேலைக்கான தகுதி இல்லாதவர்களாகவே உள்ளனர். கல்வி என்பது படிப்பை மட்டுமல்ல, வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் அளிப்பதாக இருக்க வேண்டும். என்ன படிப்பு படித்தாலும் அப்படிப்பை முடிக்கும் போது அறிவு, திறமை, மனப்பக்குவம் உட்பட நடத்தையில் மாற்றம் வந்திருக்க வேண்டும். மாற்றம் ஏற்படுத்தவில்லை என்றால் முழுமையான அறிவை பெறவில்லை என்று பொருள். வேலை கிடைத்தவுடன் பல ஆசிரியர்கள் படிப்பதை நிறுத்திக் கொள்கின்றனர். மாணவர்களை விட, ஆசிரியர்கள்தான் அதிகமாக படிக்க வேண்டும். நிர்வாகவியல் படிப்பு படிக்கும் மாணவனுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு மாணவனும் தலைமை பண்பு திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.

சிறந்த தலைமைப் பண்பும், தகவல் தொடர்பு திறனும் இருந்தால் எந்த நிறுவனமும் அதிக சம்பளத்துடன் வேலை வழங்கும். இந்த இரண்டு திறன்களும் இருந்தால் தனியாக தொழில் துவங்கி 1,000 பேருக்கு வேலை வழங்கவும் முடியும். ஒரு ஆசிரியர் சிறந்த தலைமை பண்பு உள்ளவராக இருப்பது முக்கியம்.

மாணவர் மனதில் தலைமை பண்பு திறனை ஆசிரியர் உருவாக்க வேண்டும். தலைவராக விரும்புபவர்கள் முதலில் நல்ல மனிதனாக இருக்க வேண்டும். படிக்கும்போதே ஆங்கிலத்தில் பேசும் திறனை வளர்ப்பது முக்கியம். வாழ்க்கையில் முன்னேற விரும்பும் மாணவர்கள் தமிழ் சினிமாவை பார்க்காதீர். சிந்திக்கும் திறன் மழுங்கி விடும். திறமை வளராது. இன்று எவரிடமும் இல்லாத 'நேரம்' எனும் பொக்கிஷம், மாணவர்களிடம் மட்டுமே உள்ளது. 'டிவி' சீரியல், சினிமா, கிரிக்கெட் மேட்ச் பார்த்து அந்த பொக்கிஷத்தை வீணடிப்பதை மாணவர்கள் தவிர்க்க வேண்டும். இவ்வாறு, சைலேந்திரபாபு பேசினார்.

கல்லூரி செயலாளர் ராமச்சந்திரன், அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி முதல்வர் முருகேசன், நிர்வாகவியல் துறை முதல்வர் ஸ்ரீகாந்த், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் திரளாக பங்கேற்றனர்.

*நன்றி: தினமலர்*

# இஸ்லாத்தில் எச்சரிக்கப்பட்ட பாவங்களும், தண்டனைகளும் (பாகம்-2)

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

### வட்டி உண்ணுவது

இலாபத்தை நோக்கமாக கருதி வழங்கப்படும் அனைத்து கடனும் வட்டியே! இன்று வட்டிக்கு பல பெயர்களை சூட்டிக் கொண்டு அதை ஹலாலாக்கப் பார்க்கின்றார்கள் இஸ்லாத்தின் எதிரிகள். முஸ்லிம்களே! ஜாக்கிரதை, வீதிகளிலெல்லாம் வட்டியின் பக்கம் அழைக்கும் சுவரொட்டிகள் அதிகரித்துவிட்ட காலம் இது.

உங்களின் வீடுகளுக்கும் வேலை செய்யும் இடங்களுக்கும் வட்டிக் கணக்கின் பைகளை ஏந்தியவர்களாக ஒவ்வொரு வங்கிகளிருந்தும் போட்டி போட்டுக் கொண்டு நான் கார் வாங்கித் தருகின்றேன், வீடு கட்டிக் கொடுக்கின்றேன், ஃபிரிஜ் வாங்கித் தருகின்றேன், அடுப்பு வாங்கித் தருகின்றேன், உடைகள் வாங்கித் தருகின்றேன் என்றெல்லாம் வருவார்கள்.

இவ்வாறே பெரும் எலக்ட்ரானிக் கடைகளுக்கு நீங்கள் சென்றால் அங்கேயும் இந்த முதலைகள் தன் வாயை விரித்துக் கொண்டு காத்து நிற்கின்றது உங்களை இந்த வட்டியில் சிக்கவைக்க, கவனமாக உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டே உங்களின் மூதாதையர்கள் வாழ்ந்தது போன்று சிக்கனமாக வாழ பழகிக்கொள்ளுங்கள். பிறரின் பல்லைவிட தன் முரசே மேலானது. இலாபம் இல்லாமல் அறிமுகமில்லாத எவனாவது கடன் கொடுக்க முன்வருவானா? இதற்கெல்லாம் ரொம்ப வியாக்கியானம் தருவார்கள், நாங்கள் அதற்காக இதற்காகத்தான் இவ்வளவு தொகையை மேலதிகமாக வசூல் பண்ணுகின்றோம் என்பார்கள். இவைகளில் அதிகமானவைகள் ஏமாற்றுக்களும், பொய்களுமே கவனமாக செயல்படுங்கள்.

இவ்வாறுதான் ஒத்திக்குப் பணம் வாங்குவதும் ஏலச்சீட்டு போடுவதும். இன்னும் இது போன்ற எத்தனையோ வழிகளில் வட்டிக்கு பணம் கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றது நமது இஸ்லாமிய சமுதாயம், இதில் விழிப்புணர்வு பெற வேண்டும், அல்லாஹ் நம் அனைவரையும் இந்தக் கொடுமையிலிருந்து பாதுகாப்பானாக!

### தண்டனைகள்:

யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய் எழ மாட்டார்கள்; இதற்குக் காரணம் அவர்கள், "நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே" என்று கூறியதினாலேயாம், அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்;. ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது - என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ்விடம் இருக்கிறது. ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின் பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.

அல்லாஹ் வட்டியை (அதில் எந்த பரக்கத்தும் இல்லாமல்) அழித்து விடுவான்;, இன்னும் தான தர்மங்களை (பரக்கத்துகளைக் கொண்டு) பெருகச் செய்வான்; (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டிருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 2: 275, 276)

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உண்மையான மு.்.மின்களாக இருந்தால், அல்லாஹ்வுக்கு அஞ்சியடங்கி, எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள், இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப்பட்டு விட்டது (என்பதை அறிந்து கொள்ளுங்கள்) நீங்கள் தவ்பா செய்து (இப்பாவத்திலிருந்து) மீண்டுவிட்டால், உங்கள் பொருள்களின் அசல் (முதலீடு) உங்களுக்குண்டு (கடன்பட்டோருக்கு) நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள் நீங்களும் அநியாயம் செய்யப்படமாட்டீர்கள். (அல்குர்ஆன் 2: 278, 279)

வட்டி உண்பவனுக்கும் உண்ணக் கொடுப்பவனுக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

திர்மிதியின் ஒரு அறிவிப்பில்: அதற்காக சாட்சி சொல்லும் இருவருக்கும் அதை எழுதுபவருக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என வந்திருக்கின்றது. (திர்மிதி)

### அனாதைகளின் சொத்துக்களை உண்பது

அனாதைகள் என்பவர்கள், பருவ வயதை அடைவதற்கு முன் தந்தையை இழந்தவர்கள். பருவ வயதை அடைந்து விட்டால் அவர்கள் அனாதைகளாக கருதப்படமாட்டார்கள். இவர்களின் சொத்துக்களை பாதுகாத்து கொடுப்பது முஸ்லிம்களின் கடமையாகும்.

சொந்தக்கார அல்லது சொந்தமில்லாத அனாதைகளை பொறுப்பெடுப்பவரும் நானும் சுவர்க்கத்தில் இருப்போம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். தனது ஆழ்காட்டி விரலையும் நடு விரலையும் சுட்டிக்காட்டினார்கள். (முஸ்லிம்)

அனாதைகளை பொறுப்பெடுப்பவரும் நானும் மறுமையில் இவ்வாறு இருப்போம் என நபி(ஸல்) அவர்கள் தனது ஆழ்காட்டி விரலையும் நடுவிரலையும் (இணைத்து) காட்டினார்கள். (அதபுல் மு.்.ப்ரத்)

இவ்வாறு அனாதைகளை பராமரிப்பது பற்றி இஸ்லாம் ஆர்வமூட்டுகின்றது, அதே நேரத்தில் அனாதைகளின் சொத்துக்களை உண்பது பெரும் குற்றமாகும்.

### தண்டனைகள்:

நிச்சயமாக, யார் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத்தான் - இன்னும் அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெரியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள். (அல்குர்ஆன் 4:10)

## அப்பாவித்தனமான பத்தினிப்பெண்ணை அவதூறு கூறுதல்

சிலர் தங்களின் பழிகளை தீர்த்துக் கொள்வதற்காக அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பத்தினிப் பெண்களின் மானத்தில் கை வைப்பார்கள், இது பெரும் பாவமாகும். நபி(ஸல்) அவர்கள் அரஃபாத்தினத்தில் தடுத்த விஷயங்களில் ஒன்றுதான் ஒருவரின் மானத்தை போக்குவது பற்றி.

### தண்டனைகள்:

இப்பழியை (ஒருவரிடமிருந்து ஒருவராக) உங்கள் நாவுகளால் எடுத்து(ச் சொல்லி)க் கொண்டு, உங்களுக்குத் (திட்டமாக) அறிவில்லாத ஒன்றைப் பற்றி உங்கள் வாய்களால் கூறித் திரிகின்றீர்கள்; இன்னும் இதை நீங்கள் இலேசானதாகவும் எண்ணி விட்டீர்கள். ஆனால் அது அல்லாஹ்விடத்தில் மிகப்பெரிய (பாவமான)தாக இருக்கும். (அல்குர்ஆன் 25:15)

எவர்கள் ஈமான் கொண்டுள்ளோரிடையே இத்தகைய மானக்கேடான விஷயங்கள் பரவ வேண்டுமெனப் பிரியப்படுகிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் நோவினை செய்யும் வேதனையுண்டு; அல்லாஹ் (யாவற்றையும்) அறிகிறான். நீங்கள் அறியமாட்டீர்கள். (அல்குர்ஆன் 24:19)

## முகஸ்துதி

முகஸ்துதி என்பது அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்து செய்யும் ஒரு செயலை உலக இலாபத்திற்காக பிறரின் புகழுக்காக செய்வதாகும், அப்படி செய்பவரின் அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது மற்றும் மறுமையில் தண்டனையும் உண்டு.

### தண்டனைகள்:

இணைவைப்பவர்களின் இணையை விட்டும் நான் மிகவும் தேவையற்றவன், யாராவது என்னுடன் என் அல்லாதவரையும் சேர்த்து இணையாக அமல் செய்கின்றானோ அவனையும் அவனுடைய அமலையும் விட்டுவிட்டேன் என்று அல்லாஹ் கூறியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

'செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன, ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதே கிடைக்கிறது. ஒருவரின் ஹிஜ்ரத் உலகத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தால் அதையே அவர் அடைவார், ஒரு பெண்ணை நோக்கமாகக் கொண்டால் அவளை மணப்பார் எனவே, ஒருவரின் ஹிஜ்ரத் எதை நோக்கமாகக் கொண்டதோ அதுவாகவே அமையும்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என உமர் இப்னு கத்தாப்(ரலி) மேடையிலிருந்து அறிவித்தார்கள். (புகாரி)

கியாமத்நாளில் முதன் முதலாகத் தீர்ப்பு வழங்கப்படுபவர், அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதான மனிதராவார். அவர் கொண்டு வரப்படுவார் அல்லாஹ், தான் அவருக்கு அருளிய அருட்கொடைகளை (ஒவ்வொன்றாக) எடுத்துரைப்பான். அவர் அவைகளைப் புரிந்து கொண்டு விடுவார். (பின்னர் அவ்வருட்கொடைகளின் விஷயத்தில் நமக்கு நன்றி செலுத்தி) நீ என்ன அமல் (நற்செயல்) செய்தாய்? என அவரிடம் அல்லாஹ் கேட்பான். அதற்கவர், நான் 'உன் பாதையில் போர் செய்து ஷஹீது ஆனேன்' எனக் கூறுவார், அதற்கு அல்லாஹ் கூறுவான், நீ பொய் கூறி விட்டாய், நீ புத்திக் கூர்மையான மாவீரன் என (மக்களால்) புகழப்படுவதற்காகவே போர் செய்தாய், அவ்வாறு உன்னை உலகில் புகழ்ந்து கூறப்பட்டு விட்டது. பின்னர், அல்லாஹ் உத்தரவிடுவான், அவனை முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, நரகில் தள்ளப்படும்.

பிறகு கல்வியைக் கற்று, கற்றுத்தந்து, குர்ஆனை ஓதிய அறிஞரின் விஷயத்தில் தீர்ப்புச் செய்யப்படும், அவர் கொண்டு வரப்படுவார், அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான், அவற்றை அவர் புரிந்து கொள்வார், அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) நீ என்ன அமல் செய்தாய்? என அல்லாஹ் கேட்பான், அதற்கவர் 'நான் கல்வியைக் கற்று மற்றவருக்குக் கற்றுக் கொடுத்தேன், உனக்காக குர்ஆனை ஓதினேன்' எனக் கூறுவார் அதற்கு, அல்லாஹ் 'நீ பொய் கூறிவிட்டாய், நீ அறிஞன் எனப் புகழப்பட வேண்டும் எனக் கல்வியைக் கற்றாய் 'காரீ' (குர்ஆன் ஓதுபவர்) எனப் புகழப்பட குர்ஆனை ஓதினாய்' எனக் கூறுவான் பின்னர், அல்லாஹ் உத்தரவிடுவான், அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும்.

அதற்கடுத்து ஒரு கொடையாளி கொண்டு வரப்படுவார், அவருக்குத் தான் செய்த (கொடுத்த) அருட்கொடைகளை அல்லாஹ் எடுத்துரைப்பான், அவற்றை அவர் புரிந்து கொள்வார், அவற்றின் விஷயத்தில் (நமக்கு நன்றி செலுத்த) நீ என்ன அமல் செய்தாய்? என அல்லாஹ் கேட்பான், அதற்கு அவர் என்னுடைய செல்வங்களை உன்னுடைய வழியில் செலவு செய்தேன் என்று கூறுவார் அதற்கு, 'அல்லாஹ் நீ பொய் கூறிவிட்டாய். 'கொடையாளி' என உன்னைப் புகழப்படுவதற்காகச் செலவு செய்தாய், அவ்வாறு உன்னைப் புகழப்பட்டு விட்டது.' என்று கூறுவான் பின்னர், அல்லாஹ் உத்தரவிடுவான், அவரை முகங்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு நரகில் தள்ளப்படும். (முஸ்லிம்)

யார் மக்கள் புகழ்வதற்காக ஓர் அமலைச் (நற்செயலைச்) செய்வாரோ, அவரைக் கியாமத் நாளில் அல்லாஹ் கேவலப்படுத்துவான். யார் மக்களுக்காக ஓர் அமலைச் செய்வாரோ, அல்லாஹ் கியாமத் நாளில் மக்களின் முன்னிலையில் அவரின் இரகசியங்களை வெளிப்படுத்துவான். (புகாரி, முஸ்லிம்)

யார் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகத் தேடப்படும் கல்வியை உலகின் பொருள்களை அடைந்து கொள்வதற்காகக் கற்றுக் கொள்வாரோ அவர் கியாமத்நாளில் சுவனத்தின் வாடையைக் (மணத்தை) கூட நுகரமாட்டார். (அபூதாவூது)

## பெண்களைப் போல் வேடம் போடுவதும் ஆண்களைப் போல் வேடம் போடுவதும்:

ஆண்கள் பெண்களைப் போன்று ஆடை அணிவதும் தலைமுடியை வளர விடுவதும் இன்னும் பெண்களை போன்று தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளும் அனைத்தையும் இது குறிக்கும். இது

போன்றே பெண்களும் ஆண்களை போன்று ஆடை அணிவதும் ஆண்களைப் போல் முடிகளை குறைத்துக் கொள்வதும் ஆண்களை போன்று அடையாளப்படுத்தும் அனைத்தையும் இது குறிக்கும்.

இப்படிச் செய்வது நபி(ஸல்) அவர்களின் சாபத்திற்குட்பட்ட செயலாகும். இப்படிப்பட்ட செயல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலம் இது. வாலிபர்கள் எந்த விதமான வெட்கமுமின்றி முடிகளை பெண்களைப்போல் வளர்த்துக் கொண்டு வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள். பெண்களோ ஆண்களைப் போல் முடியை குறைத்துக் கொண்டும் ஆடைகளை அணிந்து கொண்டும் வெட்கம் ரோஷமின்றி உலாவுகிறார்கள் இது இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஏற்பட்ட பெரும் ஆபத்தாகும். அல்லாஹ் நம் பெண்களை அந்நிய சூழ்ச்சிகளிலிருந்து பாதுகாப்பானாக!

**தண்டனைகள்:**

"பெண்களைப் போல் வேஷமிடும் ஆண்களையும் ஆண்களைப் போல் வேஷமிடும் பெண்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள்" (புகாரி)

"பெண் அணியும் ஆடையை அணியும் ஆணையும் ஆண் அணியும் ஆடையை அணியும் பெண்ணையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள். (அபூதாவூத்)

**பொய் முடி கட்டுவது:**

"பொய்முடியை கட்டிவிடும் பெண்ணுக்கும் கட்டிவிடப்படும் பெண்ணுக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்." (புகாரி, முஸ்லிம்)

*இன்ஷாஅல்லாஹ் தொடரும்*

# இந்தியாவில் வசிப்பது ரொம்ப காஸ்ட்லி சமாச்சாரம்!

ஒரு காலமிருந்தது... மாதம் ரூ 4000 சம்பளம் கிடைத்தால் போதும், வீடு, வாகனம், வசதியான வாழ்க்கை என நிம்மதியாக இருக்கலாம் இந்தியாவில், என்ற காலம் ஒன்றிருந்தது.

ஆனால் இன்று... ரூ 40 ஆயிரம் சம்பளம் வாங்கினாலும் மாதக் கடைசி கடன்கள் நின்றபாடில்லை. வருமானம் இருக்கிறதோ இல்லையோ, விலை கூடவோ குறைவோ...

தேவைக்கும் அதிகமாகவே நுகர் பொருள்களை வாங்கிக் குவிக்கிறார்கள். நுகர்வுக் கலாச்சாரம் என்ற பெயரில், பெரும் கடனாளிகளாகிக் கொண்டிருக்கும் நிலை.

இந்த நுகர்வுக் கலாச்சாரத்தை கண்ணை மூடிக் கொண்டு அனுபவிக்கத் தொடங்கியதன் விளைவு... கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் நாட்டின் விலைவாசி சராசரியாக

126 சதவீதம் உயர்ந்துவிட்டது.

மத்திய அரசின் புள்ளி விவரத்துறை அறிக்கையின்படி, இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் உணவான அரிசி விலை 2006-ல் குவின்டாலுக்கு ரூ 3031 ஆக இருந்தது.

இன்று அதே அரிசி, அதே எடை, ஆனால் விலை ரூ 6859!

வெங்காயத்தின் விலை 98 சதவீதம் உயர்ந்துள்ளது. இறைச்சியின் விலை 44 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் வரை உயர்ந்துள்ளது (கோழி,ஆடு). மீன் விலை 200 சதவீதம் உயர்ந்துள்ளது!

25 ரூபாய் விற்ற ஒரு கிலோ பூண்டு, ரூ 200 -ல் வந்து நிற்கிறது. இவையெல்லாம் சும்மா... சாம்பிள்கள்தான்.

நுகர்வோர் விலைக் குறியீட்டெண்களைப் பொறுத்தவரை 30 சதவீத உயர்வு காணப்படுகிறது. இதற்கு முன் எப்போதுமே பார்த்திராத மோசமான விலை உயர்வு என அலறுகிறார்கள் நிபுணர்கள்.

பொருளியல் நிபுணர்களிடம் பேசியதில், 'இந்த விலை உயர்வு பற்றி வெளிவந்திருக்கும் விவரங்கள் எல்லாமே, ஐஸ் மலையின் ஒரு சிறிய நுனிப்பகுதிதான். அதற்குக் கீழே உள்ள

பிரமாண்ட ஐஸ் மலை இருக்கிறதே... அதுதான் இந்த நாட்டின் பொருளாதார முதுகெலும்பையே உடைக்கக் கூடியதாக உள்ளது. யார் சொல்லி இந்த லைஃப் ஸ்டைலுக்கு மாறினோம்....

நாமாக... விளம்பரங்கள், மார்க்கெட்டிங் உத்திகளைப் பார்த்துத்தானே... இப்போதாவது ஒரு நிதானத்துக்கு வரவேண்டும் மக்கள். இல்லாவிட்டால், இந்தக் கப்பல், விலை என்ற ஐஸ்மலையில் மோதிச் சிதறுவதைப் பார்த்துக் கொண்டு அழும் அமெரிக்க நிலைதான் இந்தியாவுக்கும்...' என்கின்றனர் கவலையுடன்.

நாட்டின் நான்கு பெரு நகரங்களில் விலை நிலையை ஆராய்ந்ததில், இருப்பதிலேயே தலை நகர் டெல்லியில் பரவாயில்லை என்று சொல்லும் அளவுக்கு உள்ளது. ஆனால்

சென்னை மகா மோசம். நாட்டின் சராசரி விலைவாசி உயர்வை விட அதிகமாக, 146 சதவீத உயர்வாக உள்ளது.

லைஃப்ஸ்டைல் மாற்றம்தான் இந்த மோசமான நிலைக்குக் காரணம் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றனர் பொருளியலறிஞர்கள். இந்த லைஃப்ஸ்டைல்தான்

ஒவ்வொரு குடும்பமும் மருத்துவ செலவுக்கென்று தனி பட்ஜெட் போட வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளியுள்ளது. வாழ்க்கை, சுகாதாரம்...

இரண்டையுமே பாதித்துள்ள இந்த நவீன வாழ்க்கை முறை விபத்தில் முடியும் முன், இப்போது தேவை ஒரு உடனடி ப்ரேக்!

அதை எப்படி, எந்த கட்டத்தில் போட்டுக் கொள்ளப் போகிறோம்?

*- நன்றி S.M.முஹம்மது இத்ரீஸ் சுஃபி*

*பெரும்பாலான தமிழக...- முதல் பக்கத் தொடர்ச்சி ...*

வாழ்க்கை இத்தனை கவர்ச்சிகரமானதா? என்ற சந்தேகம் மனதில் தோன்றிற்று.

விளக்கைத் தேடிச் செல்லும் விட்டில் பூச்சிகள் மாதிரிச் சராமாரியாக மக்கள் படையெடுத்தனர். ஆனால் விளக்கின் உள்ளே விழுந்துவிடாமல் கவனமாக அதன் விளக்குகளாகக் கிடைத்துவிட்டபோதிலும் பெரும்பாலானோருக்குப் பிரகாசமான பெட்ரோல்மாக்ஸ் விளக்குகளாகவே அமைந்துவிட்டன.

### உழைப்புக்கேற்ற உயர்வு

இந்தியாவினுள்ளேயே வேலை தேடுவதும் சிரமம், அப்படியே கிடைத்தாலும் 'நித்தியகண்டம் பூர்ணாயுசு' கதைதான். காரணம், பல திசைகளிலும் பல்கிப் பெருகிக் கிடந்த இலஞ்சமும் ஊழலும்.

தனியார் துறைகளில் வேலை பெறத்தான் நிறையச் செலவளிக்க வேண்டுமென்றால் அரசுத் துறைகளில் நுழையவும் பலரைச் சமாளித்து ஆக வேண்டியிருந்தது.

அப்படியே சிரமப்பட்டு வேலையில் சேர்ந்தாலும் எவ்வளவு காலம் அதில் நீடிக்க இயலுமென்பதற்கு உத்தரவாதமில்லை. தனியார் துறையில் அதிகாரிகளை வேறு யாரேனும் சற்று "அதிகப்படியாகக்" கவனித்து விட்டால் பழைய ஊழியர் உடனடியாக மாற்றப்பட்டு விடுவார். அரசுச் துறைகளிலோ பின்வாசல் வழியாக நுழைந்து திடீரெனக் கண்டுபிடிக்கப்பட்டு எந்த நேரமும் வேலைநீக்க உத்தரவு வந்து வேட்டு வைக்கும்.

வேலையும் கிடைத்து நிரந்தரமும் ஆகிவிட்டது என்று வைத்துக் கொண்டாலும், சம்பளம் மிகவும் சொற்பமே. மாதச் சம்பளம் என்பது மாதம் முழுமைக்கும் வராது. இடையிலேயே தீர்ந்துபோய் மக்கள்படும் அவஸ்தை சொல்லி மாளாது.

ஒண்ணிலேயிருந்து இருபது வரைக்கும் கொண்டாட்டம், இருபத்தொண்ணிலேயிருந்து முப்பது வரைக்கும் திண்டாட்டம் என்ற கலைவாணர் பாடியபடி மாதத்தின் கடைசிப் பத்து நாட்கள் சரியான இழுபறிதான்.

வெளிநாடுகளைப் பொறுத்தவரை, படிப்புக்கேற்ற உழைப்பும் உழைப்புக்கேற்ற ஊதியமும் உறுதி. படிப்பே இல்லாதவர்களும் கூட கூலி வேலைகளில் கணிசமாகச் சம்பாதிக்கின்றனர். வசதியான வாழ்க்கைக்குத் தேவையான தங்களது சொந்தச் செலவுகளை சமாளித்துக் கொள்வதும், தமிழகத்திலிருக்கும் தங்கள் குடும்பத்தினரின் செலவுகளையும் கவனித்துக் கொண்டு, அதற்குமேலும் எதிர்காலத்திற்காகச் சேமிக்க முடிகிறது.

### அடிப்படை அவசியம்:

எதிர்காலச் சொகுசு வாழ்க்கையை எண்ணி வெளிநாடு செல்வோரைவிட, நிகழ்காலத் தேவைகளுக்காகச் செல்வோரின் எண்ணிக்கையே அதிகம். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து குடியிருக்கச் சொந்த வீடில்லாமல் இருப்போர், தம்பி தங்கைகளின் பள்ளிக்கல்விக்கே பணமின்றித் தவிப்போர், மணப் பருவமெய்திவிட்ட சகோதரிகளுக்குத் திருமணம் செய்விக்கக் கடமைப்பட்டோர் என அத்தியவாசியத் தேவைகள் அதிகமுள்ளோருக்கு ஆபத்தானவனுக்கு அனாதை ரட்சகனாகக் கைகொடுப்பது அயல்நாட்டு வாழ்க்கைதான்.

இத்தகையோர் மனைவிமாரின் நகைகளையும் வீட்டிலிருந்த இதர சொத்துக்களையும் விற்றோ அடமானம் வைத்தோ (இந்த இடத்தில் மார்க்கம் அனுமதிக்காத ஒரு பெரும்பாவத்தை நமது சமுதாயத்தவர்களும் செய்கின்றார்களே என்ற செய்தியை சொல்லத்தான் வேண்டியுள்ளது. அதாவது பொருள்களை அடமானம் எங்கு சென்று வைத்தாலும் அதற்கு வட்டி அடமானம் வைத்தவரிமிருந்து வசூலிப்பர் ஆனால் மார்க்கத்தில் வட்டி வாங்குவதும் கொடுப்பது பெரும்பாவமாகவும் அவற்றிற்கு அல்லாஹ் பெரும்தண்டனை கொடுப்பான் என்பதை விளங்கி வட்டியிலிருந்து முழுமையாக தவிர்ந்திருக்கவும். மேலும் வட்டியின் தண்டனை குறித்து இதே இதழில் 3ம் பக்கத்தில் உள்ளது அதனை படித்து தெரிந்து கொள்ளவும்) பணம் பெற்று வெளிநாடுகளுக்குப் பயணமாயினர். (அவர்களில் பலரது முயற்சிகள் பெரும் வெற்றியைக் கொடுத்து, இழந்த சொத்துக்களை மீட்கவும் மென்மேலும் செல்வம் பெருகவும் வாய்ப்பளித்தன.)

இப்படி வெளிநாடு செல்வோர் பொறுப்புடன் பணிபுரிந்து செல்வங்கள் திரட்டி, தாங்கள் பெற்றெடுத்த செல்வங்களின் பள்ளிப் படிப்பும் கல்லூரிப் படிப்பும் இனிதே முடியவும், சகோதரிமாரின் திருமணங்கள் சங்கையாக நடந்தேறவும் துணை புரிகின்றனர்.

### மாப்பிள்ளையின் மதிப்பு:

மணப் பருவம் எய்திய இளைஞர்களுக்குப் பெண் தேடுகையில் வெளிநாட்டில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தால் அது ஒரு மிகப் பெரிய சிறப்பம்சமாகக் கருதப்பட்டது.

தம்பி, என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்? என்ற கேள்விக்கு அப்பாவிற்கு ஒத்தாசையாக இருக்கிறேன் என்று பதில் வர, அப்பா என்ன பண்ணுகிறார்? என்ற அடுத்த கேள்விக்கு வீட்டில் சும்மாதான் இருக்கிறார் என்ற பழைய நகைச்சுவைத் துணுக்கிற்கேற்ப சோம்பல் காரணமாகவோ பணவசதி படைத்ததாலோ வேலை பார்க்காமல் காலத்தைக் கழித்தவர்களுக்கும் தமிழ்நாட்டினுள்ளேயே பல்வேறு பணிகளில் இருந்தவர்களுக்கு கிட்டாத அற்புத வாய்ப்பு வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு கிட்டியது. வசதியான குடும்பங்களைச்சேர்ந்த அழகிய இளம்பெண்கள் மனைவியராகக் கிடைத்தனர்.

வெளிநாட்டில் பெரிய பதவியிலிருந்த ஒருவர் விடுமுறையில் தமிழகம் வந்திருந்த போது பால்ய நண்பர் ஒருவர் வந்து எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என் மகளுக்கு ஒரு பையனைப் பார்த்த வைத்திருக்கிறேன் அவனுக்கு வெளிநாட்டில் ஒரு வேலை ஏற்பாடு செய்து கொடுக்க முடியுமா? என்று கேட்க, வெளிநாடு திரும்பியதும் தன் நிறுவனத்திலேயே வேலை ஏற்பாடு செய்து பையனை வரவழைத்துக் கொண்டார், முதல் நபர்.

அடுத்த ஆண்டு விடுமுறையில் வந்ததும் அதே பழைய நண்பர் மீண்டும் அணுகி, அந்தப் பையனுக்குத் திமிர் அதிகமாகி விட்டது நான்

இப்போது வெளிநாட்டு மாப்பிள்ளையாக்கும் அதனால் சீர்வரிசையாக ஒரு வீடு வேண்டும் கார் வேண்டும் ரொக்கவும் நகையும் இவ்வளவு வேண்டும் என்றெல்லாம் கண்டிஷன்கள்போட ஆரம்பித்துவிட்டான் எனக்கு ஒரு பெரிய உதவி செய்ய வேண்டும் எப்படியாவது அந்தப் பையனை வேலையிலிருந்து தூக்கி ஊருக்கு அனுப்பிவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம்.

வெளிநாட்டில் வேலை செய்யும் இளைஞர்களுக்கு உள்ளூர்களில் எவ்வளவு மதிப்பு இருக்கிறதென்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

### அரசுக்கு ஆதாயம்:

உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்த ஒரு மாணவனைப் பொறியாளராக ஆக்குவதற்கு அரசு 9 இலட்சம் ரூபாய் செலவடுவதாகவும் மருத்துவராக ஆக்க 16 இலட்சம் வரை செலவாகுமென்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கணக்கு 2005-ஆம் ஆண்டுக்கானவை. இப்போதையத் தொகை விவரங்களை இந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பணவீக்கத்தின் அடிப்படையில் நேர்விகிதத்தில் மாற்றிப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

பொறியியல், மருத்துவம், மற்றும் இதர படிப்புக்களை முடித்துவிட்டு நம் தாய்நாட்டில் பணிபுரியாமல் வெளிநாடுகளுக்குப் பறந்து விடுபவர்களை மூளை வடிசல் (Brain Drain) என்று குறிப்பிடுவது வழக்கம். இந்தியாவில் வேலை செய்வதைவிட வெளிநாடு மேல் என்று அவர்கள் செல்வதற்கான பிரதான காரணங்களை ஏற்கெனவே பார்த்தோம்.

ஆனால் அப்படி அவர்கள் செல்வதால் நமது அரசுக்கு எவ்வளவு பலன் கிடைக்கிறது என்பதைப் பற்றிப் பலர் சிந்திப்பதில்லை.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நமது நாட்டுப் பொருட்களினால் அரசுக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணியைவிட, வெளிநாடுகளில் வேலை செய்து நம் நாட்டினர் ஈட்டித்தரும் அன்னியச் செலாவணி மிக அதிகம்.

வெளிநாடுகளில் பணிக்குச் செல்வோர், தமக்காகவும் தம் குடும்பங்களுக்காகவும் சம்பாதிப்பதுடன் தாய்நாட்டிற்காகவும் மறைமுகமாக இவ்வளவு சேவை செய்கின்றனர்.

### பிரியமான பிரிவு

வெளிநாடுகளில் வேலை செய்வோரை மேலோட்டமாக இரு பிரிவினராகப் பிரிக்கலாம். மனைவி மக்களைப் பிரிந்து தனியாக இருப்போர் மற்றும் குடும்பத்துடன் வெளிநாடுகளிலேயே குடியேறி விட்டோர் என்பதுதான் அந்தப் பிரிவுகள்.

இதில் இரண்டாவது பிரிவினரை மேலும் இரு உப பிரிவுகளாகப் பிரிக்கலாம் குடும்பத்தினருடன் இருந்துகொண்டு குழந்தைகளை வெளிநாட்டிலியே படிக்க வைத்துக் கொண்டிருப்போர் மற்றும் மனைவியை மட்டும் தன்னுடன் வைத்துக் கொண்டு குழந்தைகளைப் படிப்பு காரணமாக தாயகத்திலேயே விட்டுவிடுவோர்.

முதல் பிரிவினரை எடுத்துக் கொண்டால், மனைவி மக்களைப் பிரிந்து தனியாக வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பவர்கள் அவர்கள். பெரும்பாலும் குறைந்த சம்பளத்தில் இருப்பவர்கள்.

குடும்பத்தினரைப் பிரிந்து இருந்தாலும் இன்றைய அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகத் தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் அடிக்கடி தன் மனைவி, குழந்தைகள், பெற்றோர்கள் ஆகியோருக்கும் சேர்த்து நன்கு சேமிக்கின்றனர். சிலர் சந்தித்துவிட்டுத் திரும்புகின்றனர்.

இரண்டாவது பிரிவினருக்கு எல்லோரும் ஒன்றாக ஒரே இடத்தில் வசிப்பதால் எந்தவிதச் சிரமமுமின்றி வாழ்நாளைக் கழிக்க முடிகிறது. உயர்ந்த பதவிகளில் இருப்போரும் சொந்த வியாபாரம் செய்வோரும்தான் பெரும்பாலும் இந்தப் பிரிவில் அடங்குவர். நல்ல வருமானம் காரணமாக, குடும்பச் செலவு, மருத்துவச் செலவு என்று எல்லோருக்காகவும் செலவு செய்தும்கூட அவர்களும் கணிசமான பணம் மிச்சம் பிடிக்க முடிகிறது.

குழந்தைகளைப் பிரிந்து கணவன் மனைவியாக வெளிநாட்டில் இருக்கும் கடைசிப் பிரிவினர், பள்ளி அல்லது கல்லூரி விடுமுறைகளில் குழந்தைகளை வரவழைத்துச் சந்தித்துக் கொள்கின்றனர். பெற்றோரைச் சந்தித்த சந்தோஷம் குழந்தைகளுக்கு என்றால் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ந்த திருப்தி பெற்றோருக்கு இவர்களும், குழந்தைகளைப் பிரிந்த தியாகத்திற்கு நன்று சமபாதிக்கவும் சேமிக்கவும் செய்கின்றனர்.

ஆக, எந்தப் பிரிவில் அடங்குபவராக இருந்தாலும் இறுதியில் எல்லோராலும் கணிசமாகச் சேமிக்க இயல்வதுதான் இதன் சிறப்பம்சம்.

தாய்நாட்டில் வாழ்நாள் முழுக்க உழைத்தாலும் சம்பாதிக்க முடியாத பணத்தை வெளிநாட்டில் சில ஆண்டுகளிலேயே சம்பாதித்துவிட முடியும். இதற்காகவே பலர் இந்தியாவில் உயர்ந்த பதவிகளில் இருந்தபோதிலும் அவற்றை ராஜினாமா செய்துவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று சில ஆண்டுகள் உழைத்துப் பெரும் பணத்துடன் தாய்நாடு திரும்புகின்றனர். அப்படி அவர்கள் ஈட்டுகின்ற செல்வம்தான், அவர்களது எஞ்சிய கால வாழ்வைச் சுலபமாக ஓட்டுகின்ற சக்தி.

### அக்கரையில் இச்சை:

தூரத்துப் பச்சை கண்ணுக்கழகு என்றும் இக்கரைக்கு அக்கரை பச்சை என்றும் சொல்லப்படும் பழமொழிகளின்படி இந்தியாவில் இருக்கையில் வெளிநாடு பசுமையாகத் தோன்றும் வெளிநாடு வந்து விட்டாலோ தாய்நாடுதான் மேலென்று தோன்றும் என்று வெளிநாடு சென்ற சிலர் பிதற்றுவதுண்டு.

ஒரு உழைப்பாளியின் மனக் குமுறல் என்றும் இங்கு மணல் மட்டும் பாலையல்ல சிலரது மனமும்தான் என்றும் பக்கம் பக்கமாக எழுதுவார்கள் மணிக்கணக்காகப் பேசுவார்கள் வெறுமனே பிறரது அனுதாபங்களைப் பெறவும் தங்களது எழுத்துத் திறன் மற்றும் பேச்சுத் திறனை மற்றவர்களுக்குப் பறைசாற்றவும்தான் அவர்கள் இப்படிச் சொல்கிறார்களே தவிர உண்மையான பொருளில் அல்ல.

இப்படிச் சொல்வோர் எல்லாம் வெளிநாடுகளிலேயே தொடர்ந்து இருந்துக்கொண்டுதான் வருடக் கணக்கில் அப்படிப்

பேசிக் காலத்தைக் கழித்துக் கொண்டிருப்பார்களேயன்றி ஊர் திரும்பிவிட மாட்டார்கள் அப்படியே ஏதேனும் ஒரு வெறுப்பில் ஊர் திரும்பிவிட்டாலும் அதிக நாட்கள் அவர்களால் ஊரில் தாக்குப்பிடிக்க முடியாது மீண்டும் காந்தம் அவர்களைக் கவர்ந்திழுக்கும் வசதியான வாழ்க்கை பற்றிய வசந்த நினைவுகள் வாட்டும்.

வெளிநாட்டில் தங்களுக்குப் பழக்கமான நண்பர்களையோ உறவினர்களையோ பிடித்து வேறு ஏதேனும் விசா புதிதாக ஏற்பாடு செய்யச் சொல்லி மீண்டும் சென்று விடுவார்கள். சம்பாதித்து வந்த பணத்தையெல்லாம் புதிதாக வியாபாரம் தொடங்கி அதில் போட்டு பிறகு அனைத்தையும் இழந்து மீண்டும் அக்கரைதான் உண்மையிலேயே பச்சை என்ற அதீத உணர்வுடன் அங்கே செல்வோர் அதிகம்.

சதா அசைவ உணவே சாப்பிட்டுப் பழக்கப்பட்ட ஒருவர் எப்படிச் சைவ உணவிற்கு எளிதில் மாற முடியாதோ அது மாதிரி வெளிநாட்டு வாழ்க்கைக்கு பழக்கப் பட்டவர்களால் அவ்வளவு சுலபத்தில் உள்ளூரில் நாட்களை கழிக்க இயலாது.

### ஆப்பமா தோசையா?

அயல்நாடுகளில் பணிபுரிந்து தாயகம் திரும்புபவர்களைச் சந்திக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் முடித்துவிட்டு ஒரு வழி (ஒன்-வே) யில் வந்து விட்டீர்களா அல்லது திரும்பிச் செல்கிற மாதிரி விடுமுறையில் வந்திருக்கிறீர்களா? என்று கேட்பதுண்டு. வேறு சிலர் அதையே சூசகமாக ஆப்பமா தோசையா? என்பார்களாம் ஒரே ஒரு பக்கம் மட்டுமே வார்ப்பதால் ஆப்பம் 'ஒரு வழி'யையும், இரு புறமும் திருப்பிப் போடப்படுவதால் தோசை திரும்பிச் செல்வதையும் குறிக்கும் என்பது சங்கேத மொழி.

தோசை வார்க்கும்போது அகப்பை மட்டும்தான் அசைகிறது, தோசைக்கல் அப்படியேதான் இருக்கிறது ஆனால் ஆப்பம் சுடும்போதோ மொத்த ஆப்பச் சட்டியுமே இப்படியும் அப்படியுமாக ஆட்டப்படுகிறது அதைப்போல் 'ஒரு வழி'யில் வருபவர்களின் குடும்பமே மொத்தத்தில் ஆடிப்போகும் என்பதை நாசூக்காக உணர்த்த அப்படிக் கேட்டார்களோ என்னவோ, தெரியவில்லை.

எந்த அர்த்தத்தில் அவர்கள் கேட்டிருந்தாலும் மறுபடியும் செல்லத்தான் வந்திருக்கிறேன் என்பதை மன மகிழ்ச்சியுடன் சொல்பவர்கள் முடித்து விட்டு வந்துவிட்டேன் என்பதை மட்டும் முகத்தைத் தொங்கப் போட்டவாறுதான் சொல்வார்கள்.

கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளில் வெளிநாடுகளில் வேலை செய்பவர்களின் அல்லது செய்தவர்களின் வாழ்க்கைத் தரம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழகத்தில் முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும் சில ஊர்களில் ஆண்டுக்கு ஆண்டு காணப்படும் மாற்றங்களே இதற்குச் சாட்சி.

உறவினர்களையோ நண்பர்களையோ பார்க்க வெளியூர்க்காரர்கள் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் சென்றால் ஊரே வித்தியாசமாகக் காட்சியளிக்கும், வீடுகள் புத்தம்புதிதாக மாறியிருக்கும்

வெளிநாட்டுச் சம்பாத்தியத்துடன் முதல் விடுமுறையில் வரும்போது தங்கள் பழைய வீட்டைப் புதுப்பிப்பதும் ஒரு சில ஆண்டுகளே ஆனபின் அதை மொத்தமாக இடித்து விட்டுப் புதிதாகக் கட்டுவதும் பலருக்கு வழக்கமாகி விடுகிறது. அதேபோல் விடுமுறையில் வரும் சமயத்தை அனுசரித்துத் திருமணங்கள் விமரிசையாகச் செய்யப்படுவதும் அன்றாடக் காட்சி

இத்தகைய ஊர்களில் வீடுகளின் முன்னால் எப்போது பார்த்தாலும் செங்கல் இருக்கும் அல்லது பந்தல் இருக்கும் ஒன்று வீடு கட்டுவதற்காக மற்றது தாலி கட்டுவதற்காக.

### சிரமத்தில்தான் சிகரம்.

வெளிநாடுகளில் வேலை செய்வதிலும் சில சிரமங்கள் இல்லாமலில்லை. வேலைப்பழு, நேரம் காலமற்ற வேலைகள், எல்லாவற்றிற்கும் மேலாக ஏறுக்குமாறான தட்பவெப்ப நிலைகள் என்று பல இன்னல்களைச் சந்திக்க வேண்டிவரும். ஆனால் அதற்கேற்ற பலன்களும் உண்டு.

பெரும்பாலானோர் பொறுப்புடன் உழைத்துச் சம்பாதிக்கும்போதிலும் ஒரு சிலர் மட்டும் வெளிநாடுகளுக்குச் சென்றபின் தீய பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகின்றனர். உள்நாட்டில் இருக்கும்வரை உறவினர் அல்லது குடும்பத்தினரின் நேரடிக் கண்பார்வையிலேயே பணிபுரிகையில் தீண்டமுடியாத சில கெட்ட பழக்கங்கள், வெளிநாடுகளில் முற்றிலும் அந்நியரின் சகவாசத்தின் சுலபமாகத் தொற்றிக் கொண்டு விடுகின்றன.

அதில் பிரதானமானது குடிப்பழக்கம். வளைகுடா நாடுகளில் இத்தயை பழக்கங்கள் மிக அரிதுதானென்றாலும் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற கீழைநாடுகளில் அது பரவலாக காணப்படுகின்றது.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று நம் முன்னோர் சொன்னதை இவர்கள் 'திரவம் தேடு' என்று தவறாகப் புரிந்துக் கொண்டார்களோ என்னவோ?

### முடிவுரை:

தவறாமல் தண்ணீர் ஊற்றினால் தாவரங்கள் நன்கு வளரும். அத்துடன் உயர்ந்த ரக உரங்களைப் போட்டால் செடிகள் செழிப்படையும். அதுபோலவே உழைத்துச் சம்பாதிப்பதில் உயர்வு உண்டுதானென்றாலும், அயல்நாட்டுச் சம்பாத்தியமென்றால் அதன் சிறப்பே அலாதிதான்.

வயிறார உண்டால்தான் வயற்காட்டில் நன்கு வேலை செய்ய இயலும் கடினமாக வேலை செய்தால்தான் விளைச்சல் பெருகும் விவசாயியின் வாழ்வு மலரும் இப்படி பலவிதச் செயல்கள் ஒன்றை ஒன்று சார்ந்ததாகவும் சங்கிலித் தொடராகவும் அமைந்துவிடுவது மாதிரி வெளிநாட்டு வாழ்க்கையால் கிட்டும் அதிகச் சம்பாதிப்பு மகிழ்ச்சியான மனதையும் வளமான வாழ்க்கையையும் அதன் விளைவாகக் குடும்பத்தில் குதூகலத்தையும் அளிக்கக் காரணமாகின்றது.

வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல்லுயரும் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. நெல் உயர்ந்தால்தான் நெஞ்சங்களெல்லாம் நிறையும். ஏனெனில் சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்

# யுவான் ரிட்லி - துணிச்சலின் மறுபெயர்

யுவான் ரிட்லி (Yvonne Ridley), நம்மில் பலருக்கும் நன்கு தெரிந்த பெயர். பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவர். பத்திரிக்கையாளர், சமூக சேவகர், அரசியல்வாதி என்று பல பரிமாணங்களை கொண்டவர்.

இவர் பேச நான் கேட்ட மற்றும் படித்த சில தகவல்களை இந்த பதிவில் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவிருக்கிறேன்...இன்ஷா அல்லாஹ்

இவர் இஸ்லாத்திற்கு வந்த விதம் பற்றி சுருக்கமாக...

அது செப்டம்பர் 2001 ன் பிற்பகுதி, சகோதரி யுவான் ரிட்லி அவர்கள் பிரிட்டனின் சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைக்காக பணியாற்றிய நேரம். உலகம், இரட்டை கோபுர தாக்குதல்களால் ஸ்தம்பித்திருந்த நேரம். அமெரிக்காவின் சந்தேகக் கண்கள் அப்கானிஸ்தான் மீதும், அதனை ஆளும் தாலிபான்களின் மீதும் வலுவாக விழுந்திருந்த சமயம்.

இந்த சூழ்நிலையில் தான் யுவான் ரிட்லி அவர்கள், தாலிபான்களை பற்றி செய்தி சேகரிப்பதற்காக பாகிஸ்தானில் இருந்து அப்கானிஸ்தானிற்கு புறப்பட்டார். ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இருந்தும் மறைமுகமாக அப்கானிஸ்தானிற்குள் நுழைந்து விட்டார். எப்படி? பர்காவை அணிந்து, எல்லையோர மக்கள் செல்வது போல் கழுதையின் மீது பயணம் செய்து அப்கானிஸ்தானிற்குள் நுழைந்து விட்டார்.

உள்ளே நுழைந்த சிறிது நேரத்தில், தாலிபன் வீரர் ஒருவரின் முன், கழுதையிலிருந்து தவறி விழுந்து மாட்டிக்கொண்டார். உளவாளி என்று சந்தேகம் எழுப்பி தாலிபன் அரசாங்கம் அவரை சிறையில் தள்ளியது. பதினோரு நாட்கள் சிறைவாசத்திற்கு பின்பு, அக்டோபர் 9, 2001ல், தாலிபன்களால் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

சிறையிலிருக்கும் போது தன்னை ஒரு தாலிபன் வீரர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள அழைத்ததாகவும், தான் மறுத்து விட்டதாகவும், ஆனால் சிறையிலிருந்து வெளியே சென்ற பின் குர்ஆனைப் படிப்பதாக தான் அந்த வீரரிடம் சொன்னதாக யுவான் ரிட்லி பின்னர் தெரிவித்தார்.

கொடுத்த வாக்குறுதியை காப்பதற்காகவும், மேலும் பெண்களின் நிலை பற்றி இஸ்லாம் என்ன சொல்கிறது என்று ஆராய்வதற்கும் குர்ஆனைப் படிக்க, 2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். அல்ஹம்துலில்லாஹ்...

இனி இவர் சொல்ல நான் படித்த, கேட்ட சில தகவல்கள்...

### சிறையிலிருந்த போது...

'நான் சிறையிலிருந்த நாட்களில், அவர்களை கடுமையாக திட்டியிருக்கிறேன், அவர்களை நோக்கி உமிழ்ந்திருக்கிறேன், அவர்கள் தந்த உணவை உண்ணாமல் அவர்களை அசிங்கப்படுத்தியிருக்கிறேன். இதையெல்லாம் விட, ஒருநாள், என் ஆடைகளை களைந்துவிட்டு அவர்கள் முன் நின்று அவர்களை சங்கடப்படுத்திருக்கிறேன்.

அப்போது அங்கு வரவழைக்கப்பட்ட தாலிபான்களின் உதவி வெளியுறவுத்துறை அமைச்சர் (Deputy Foreign Minister) என்னிடம், நீங்கள் இப்படி செய்வது சரியில்லை, உங்கள் ஆடைகளை திருத்திக்கொள்ளுங்கள், உங்கள் செயல் எங்கள் வீரர்களின் மனதில் தவறான எண்ணங்களை விதைக்கக்கூடும் என்றார்.

இன்னும் சில நாட்களில் வல்லரசுகள் இவர்கள் மீது குண்டு வீசப் போகிறது, அதைப்பற்றி இவர்கள் கவலைப்படவில்லை, என் உடையைப்பற்றி தான் அதிகம் கவலைப்படுகிறார்கள். வல்லரசுகள் இவர்களை விரட்ட தேவையில்லாமல் பணத்தை செலவழித்துக்கொண்டிருக்கிறது, ஆபாசமாக உடையணிந்த பெண்களை இவர்கள் முன்பு அழைத்து வந்தாலே போதும், இவர்கள் ஓடிவிடுவார்கள்'...

சிறையிலிருந்து வெளியே வந்த இவர் தாலிபன்கள் தனக்கு சிறையில் ஒரு பெண்ணுக்குண்டான மதிப்பை அளித்ததாக தெரிவித்தார். அவ்வளவுதான். சில ஊடகங்கள் இவருக்கு 'ஸ்டாக்ஹோம் சின்றோம் (Stockholm Synrome)' பிரச்சனை இருப்பதாக தெரிவித்தன. இந்த பிரச்சனை இருப்பவர்கள், தங்களை கடத்தியவர்களுக்கு சாதகமாக பேசுவார்களாம். அதுசரி...

தான் சார்ந்த சண்டே எக்ஸ்பிரஸ் பத்திரிகை தன்னை காப்பாற்ற முயற்சி செய்ததை பற்றி குறிப்பிடும் இவர்,

'சண்டே எக்ஸ்பிரஸ்சின் உரிமையாளர் ஒரு யூதர். அவர் என்னைக் காப்பாற்ற ஒரு குழுவை அமைத்து, இஸ்லாமாபாத்தில் உள்ள தாலிபன் தூதரகத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அவர்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு கொடுத்துவிடுங்கள், எப்படியாவது ரிட்லியை என்னிடம் கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டுவிட்டார்.

அவர் அமைத்த குழுவின் தலைவர் தாலிபன்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் முடிவில் அவர் சண்டே எக்ஸ்பிரஸ் உரிமையாளரை தொடர்பு கொண்டு பேசினார்.

அவர்களுக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டீர்களா? ஒரு மில்லியன், இரண்டு மில்லியன்?

இல்லை சார், நான் கொண்டு சென்ற காசோலையை திரும்ப கொண்டு வந்துவிட்டேன். அவர்களுக்கு பணமெல்லாம் வேண்டாமாம்..

என்ன பணம் வேண்டாமா, வேறு என்ன வேண்டுமாம், ஆயுதங்களா?

இல்லை சார், அவர்களுக்கு எதுவும் வேண்டாமாம், நம்மைப் போன்றவர்கள் அவர்களுக்கு குறைந்தபட்ச மரியாதை அளித்தால் போதுமாம்.

இதனை அந்த குழுத்தலைவர் என்னிடம் விவரித்தார். தாலிபன்கள் மீதான வெறுப்பு உச்சத்தில் இருந்த நேரமது. அவர்கள் சொல்லியதில் நிறைய அர்த்தமிருக்கிறது. மேலும் சண்டே எக்ஸ்பிரஸ் குழுவினர் என்னை காப்பாற்ற எடுத்த முயற்சி அளப்பெரியது'

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே, அதாவது இஸ்லாத்தை பற்றி

படித்துக்கொண்டிருந்த போதே, மது அருந்துவதை நிறுத்தி விட்டார்.

'இஸ்லாம் என் வாழ்க்கையில் ஒரு அர்த்தத்தை தந்துவிட்டது. நான் மதுவை நிறுத்தி விட்டேன். இனி தொலைப்பேசியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு, ஆண் நண்பர்களிடமிருந்து பார்ட்டிகளுக்கு செல்ல எப்போது அழைப்பு வரும் என்று எதிர்ப்பார்க்கவும் போவதில்லை'

இவருக்கு இஸ்லாத்தில் உள்ள சந்தேகங்களை களைய பெரிதும் உதவியது, பிரிட்டன் ஊடகங்களால் அடிப்படைவாதி என்றும் தீவிரவாத எண்ணங்களை உருவாக்குபவர் என்றும் சொல்லப்பட்ட பின்ஸ்பரி பார்க் (Fins bury Park Masjid, North London) மசூதியின் இமாம் அபு ஹம்சா அல்-மஸ்ரி.

'அவர் எனக்கு மிகவும் உதவியிருக்கிறார். ஒருமுறை எனக்கு அவரிடமிருந்து அழைப்பு.

சகோதரி, இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக வாழ்த்துக்கள்.

இல்லை இல்லை, நான் இன்னும் தெரிந்துக்கொள்ளவேண்டியது இருக்கிறது.

அப்படியா, ஒன்றும் அவசரமில்லை, நன்றாக ஆராய்ந்து செயல்படுங்கள். உங்களுக்கு உதவி தேவையென்றால் முஸ்லிம் சமுதாயமே உங்களுக்கு உதவ தயாராக இருக்கிறது. ஆனால் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், நமக்கு மரணம் எப்போது வேண்டுமென்றாலும் வரலாம். நாளையே நீங்கள் இறந்தால் நீங்கள் சேருமிடம் நரகம்தான்...

ஊடகங்களோ இவரை தவறாக சொல்கின்றன, ஆனால் இவரோ மிகவும் கண்ணியமானவராக தெரிந்தார். அவர் சொன்ன அந்த வார்த்தைகள் என்னை மிகவும் பாதித்தன. அந்த வார்த்தைகள் நான் இஸ்லாத்தை ஏற்கும்வரை என்னுள் ஒலித்துக்கொண்டிருந்தன'

யுவான் ரிட்லி அவர்கள் தான் இஸ்லாத்திற்கு வந்தவுடன் தன்னால் பின்பற்றுவதற்கு மிகவும் கடினமாக இருந்ததாக குறிப்பிட்டது ஐந்து வேளை தொழுகைகளைத்தான். இப்போது அவர் அதனை நிவர்த்தி செய்து கொண்டு விட்டார். அல்ஹம்துலில்லாஹ்

இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் அரசுகளை கடுமையாக விமர்சிப்பவர்...

அமெரிக்காவின், தீவிரவாதத்தின் மீதான போரானது, உண்மையில் இஸ்லாத்தின் மீதான போர் என்று கூறியவர்.

தான் சிறையிலிருந்தபோது இஸ்ரேலின் உளவுத்துறை தன்னை கொல்ல சதி செய்ததாகவும், அதன்மூலம் தாலிபன்களின் மீதான போருக்கு ஆதரவு கூடுமென அவர்கள் திட்டம் தீட்டியதாகவும் கூறியவர்.

பல சமயங்களில் சகோதரி யுவான் ரிட்லி அவர்களின் வார்த்தைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். ஒரு முறை அவர் கூறினார்...

'கோக கோலாவை (Coca Cola) முஸ்லிம்கள் குடிப்பது நம் பாலஸ்தீனிய குழந்தைகள் மற்றும் சகோதரிகளின் ரத்தத்தை குடிப்பதற்கு ஈடாகும். இதற்கு நாம் நேரடியாக இஸ்ரேலிய ராணுவத்திடம் சென்று குண்டுகள் கொடுத்து நம் பாலஸ்தீனிய மக்களை சுடச்சொல்லலாம்'

ஆவேசமாக பேசக்கூடியவர், நகைச்சுவை உணர்வு மிக்கவர், மிகுந்த துணிச்சல்காரர்.

- அரசுகளால் தீவிரவாதிகள் என்று கூறப்படும் சிலருக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தவர்.

இப்படி பல சொல்லலாம்.

முஸ்லிம்களுக்கெதிரான செயல்களை கண்டித்து பல போராட்டங்களை முன்னின்று நடத்தியவர்.

ஒரு முறை 'ஏன் சிலர் (Islam Ophobes) முஸ்லிம்களை கண்டால் பயப்படுகிறார்கள்' என்று ஒருவர் கேட்டதற்கு, 'நாம் அல்லாஹ்விடம் பயப்படும்வரை அவர்கள் நம்மை பார்த்து பயந்து கொண்டுதான் இருப்பார்கள் (They Will Fear us Until we Fear Allah )' என்று கூறியவர்.

மேலும் 'ஏனென்றால், நாம் அல்லாஹ்விடம் பயப்படும்வரை, நமக்கு மது தேவையில்லை, பார்ட்டிகள் தேவையில்லை, பப்புகள் (P u b) தேவையில்லை, இப்படி அவர்கள் வியாபாரத்தை பெருக்கக்கூடிய பல நமக்கு தேவையில்லை. இதனால் தான் பயப்படுகிறார்கள்'

தன்னை மிகுந்த நெகிழ்ச்சி அடையச்செய்த ஒரு நிகழ்ச்சியாக அவர் கூறியது...

'எனக்கு இறைவன் ஹஜ் செய்யக்கூடிய பாக்கியத்தை நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சில வருடங்களிலேயே கொடுத்தான். ஒருமுறை தொழுகைக்கு தாமதமாகிவிட்டது. பாங்கு சொல்லிவிட்டார்கள். நான் அவசர அவசரமாக ஓடுகிறேன், அங்கே சென்றால் என்னைப்போல பலரும் தாமதம். நாங்கள் எல்லோரும் முட்டிமோதி கொண்டிருக்கிறோம் பள்ளிவாயிளுக்குள் நுழைய. ஒரே குழப்பம்.

அப்போது தக்பீர் சொல்லப்பட்டது. நான் என் தொழுகை விரிப்பை சாலையிலேயே விரித்து விட்டேன். அப்போது பார்க்கிறேன் என் முன்னும் , பின்னும் ஆயிரக்கணக்கான மக்கள், மிக அழகாக வரிசையில் நின்றுக்கொண்டிருந்தார்கள், மிக அதிக ஒழுக்கத்துடன். சில நொடிகளுக்கு முன் குழப்பங்களுடன் இருந்த இடமா இது?

நான் சொல்லுகிறேன், உலகில் எந்த ஒரு ராணுவமும் இப்படி ஒரு ஒழுங்கை ஒருசில நொடிகளில் கொண்டுவரமுடியாது. பாருங்கள் என் குடும்பத்தை, இதுதான் எங்கள் ஒற்றுமை, இதுதான் எங்கள் சகோதரத்துவம்.

இந்த சகோதரத்துவத்தை நாம் என்றென்றும் கடைப்பிடித்திருந்தால், இன்று அவர்கள் நம் நாடுகளை நெருங்கியிருக்க மாட்டார்கள். நம் சகோதரர்களை கொடுமைப்படுத்த மாட்டார்கள்'

ஹிஜாபைப் பற்றி இவர் சொல்ல கேட்கணுமே...அடடா...

'ஹிஜாப் எங்கள் உரிமை. நான் முஸ்லிமென்பதை காட்டுகிறது. என்னிடம் மதுவை நீட்டவேண்டாம் என்று சொல்கிறது, என்னிடம் தவறான பேச்சுக்களை பேச வேண்டாம் என்று சொல்கிறது. இது ஏன் இவர்கள் கண்களை உருத்துகிறது? என் பண்புகளை பார்த்து இவர்கள் என்னை மதிக்கட்டும், என் உடைகளை பார்த்தல்ல. அப்படி என் உடைதான் இவர்களுக்கு முக்கியம் என்றால் அவர்கள் நட்பு எனக்கு தேவையில்லை. ஹிஜாப் அணியாத முஸ்லிம் பெண்கள், ஹிஜாப் அணியாததற்கு எந்த ஒரு ஆதரவையும் என்னிடம் எதிர்ப்பார்க்க வேண்டாம்'

ஒருமுறை ஒரு நாட்டில் நடந்த கலந்துரையாடலில், ஒரு பெண் இவரிடம்,

'இந்த நாடு தான் மிகுந்த வெப்பமுள்ள நாடாயிற்றே...இங்கேயும் நீங்கள் ஏன் ஹிஜாப் அணிந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு,

சகோதரி யுவான் ரிட்லி அவர்கள் சொன்ன பதில், 'நரகம் இதைவிட வெப்பமாய் இருக்கும், பரவாயில்லையா?' என்பது...

'இந்த நாடு தான் மிகுந்த வெப்பமுள்ள நாடாயிற்றே...இங்கேயும் நீங்கள் ஏன் ஹிஜாப் அணிந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு, சகோதரி யுவான் ரிட்லி அவர்கள் சொன்ன பதில், 'நரகம் இதைவிட வெப்பமாய் இருக்கும், பரவாயில்லையா?

இறைவன், தான் நாடியவர்களை இஸ்லாத்தின்பால் அழைத்து வரும் ஒவ்வொரு விதமும் வியப்பைத் தருகின்றன. அவர்களின் மூலம் அவன் நிறைவேற்றும் காரியங்களும் நம் கற்பனைக்கெட்டாதவை. எல்லாப் புகழும் இறைவனிற்கே...

சமீபத்தில் நான் கண்டு வியந்த மற்றுமொருவர் சகோதரர் ஜோஷுவா எவன்ஸ் (Br.Joshua evens) அவர்கள். இவருடைய 'How The Bible led me to Islam என்ற வீடியோவை பாருங்கள், யு டியுப்பில் கிடைக்கிறது. இவர்களைப் போன்றவர்களை பார்க்கும் போதெல்லாம் என்னிடம் பல கேள்விகள் எழுகின்றன. அவற்றில் முக்கியமான கேள்வி 'Did You Look Islam For Granted?' என்பதுதான்...

யுவான் ரிட்லி அவர்களுக்கு தற்போதிருக்கும் ஒரு மிகப்பெரும் ஆசை, தன் மகள் டைசி (Daisy) இஸ்லாத்தின்பால் வரவேண்டும் என்பதுதான்.

'ஆம், அவள் வந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். ஆனால் அவளாக வரவேண்டும்'

ஒருமுறை யுவான் ரிட்லி அவர்கள் மிக அழகாக சொன்னது 'இஸ்லாத்தில், இறைநம்பிக்கையை வைத்தே ஒருவர் உயர்நிலையை அடைய முடியும், அழகினாலோ, வைத்திருக்கும் பணத்தினாலோ, பதவியினாலோ அல்ல'

அவர் சொன்ன இந்த திருக்குர்ஆனின் அர்த்தங்கள் நம்மிடம் என்னென்றும் இருக்க வேண்டும், நிலைக்க வேண்டும்.

*நன்றி: முஹம்மது முஹையிதீன்*

Reference:

1.Sister Yvonne Ridley's speech at Reverts Meeting, New Zealand,2005

2. Sister Yvonne Ridley's Interview at The Hour 'Canadian Broadcasting Corporation TV

3. Sister Yvonne Ridley's Interview With BBC, dated 21st September 2004

# மினா - அரபாஃ மெட்ரோ ரயில் தயார்

முஸ்லிம்களுக்கான ஹஜ் புனிதக்கடமையின் போது யாத்ரீகர் போக்குவரத்துக்கு உதவும் வகையில் மினா, அரஃபா, முஸ்தலிஃபா ஆகிய புனித இடங்களுடன் மக்காவை இணைக்கும் மெட்ரோ ரயில் திட்டம் முழுமை பெற்றுள்ளது. ஹஜ் யாத்ரிகர்களுக்கு இத்திட்டம் மிகவும் பயனாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

முன்னதாக, சவுதி அரேபிய நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் இளவரசர் மன்சூர் பின் மித்அபு இதனை ஆய்வு செய்ய உள்ளார்.

அமைச்சக வட்டாரங்கள் இதுபற்றி கூறுகையில் '6.5 பில்லியன் சவூதி ரியால்கள் செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மக்கா மெட்ரோ திட்டம், யாத்ரிகர்களுக்கான திட்டங்களிலேயே இரண்டாவது பெரிய திட்டமாகும். இதன்மூலம் ஒரு மணி நேரத்திற்கு 72,000 யாத்ரிகர்கள் பயணித்துப் பயனடையலாம். புனிதக்கிரியைத் தலங்களான மினா, அரஃபா, முஸ்தலிஃபா ஆகியவற்றில் தலா மூன்று நிலையங்கள் என்கிற கணக்கில் 9 நிலையங்கள் இதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, சுமார் 300 மீட்டர் நீளமுள்ள 10 தொடர்வண்டிகள் இயக்கப்படும் என்று சவுதி அரேபிய நகர்ப்புற வளர்ச்சி துறை துணை அமைச்சர் ஹபீப் ஜெயினுல் ஆபிதின் தெரிவித்துள்ளார். 'ஒவ்வொரு வண்டியும் 3000 பயணிகளுக்கு இடமளிக்கும்' என்றார் அவர். இந்த ரயில் திட்டமானது அரஃபா - முஸ்தலிஃபா மற்றும் முஸ்தலிஃபா - மினா இடையேயான பயண கால அளவையும், மக்கா நகரின் போக்குவரத்து நெரிசலையும் வெகுவாக குறைத்துவிடும்.

மேலும் அவர் தெரிவிக்கையில் 'இரண்டாம் கட்டத்தில், தொடர்வண்டிகளின் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப்படும். மக்கா புனித ஆலயத்திற்கான நிலையம் உம்முல்குரா சாலையில் அமைக்கப்படும். இந்த அல்மஷாயிர் ரெயில்வேயானது படிப்படியாக மதீனா, ஜெத்தா நகரங்களையும் இணைத்துச் செயற்படும் வகையில் அல்-ஹரமைன் ரெயில்வேயுடன் இணைக்கப்படும்'என்று கூறினார்.

வருடம் முழுவதும் இந்த ரெயில்கள் இயக்கப்படும். 80-120 கி.மீ வேகத்தில் பயணிக்கும் இந்த ரெயில்களில் 20விழுக்காடு அமர்ந்து பயணிக்கவும், 80 விழுக்காட்டினர் நின்று பயணிக்கவுமாக அமைக்கப்பட்டுள்ளனவாம்.

*- நன்றி அராப் நியூஸ்*

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 7:3

## போட்டிக்குரிய கேள்விகள்

1. அன்று பிறந்த குழந்தையை போன்று மாற்றிவிடும் வணக்கம் யாது?
   a) ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழுகை
   b) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்
   c) ஏற்றுக் கொள்ளப்பட்ட நோன்பு

2. பெண்கள் அடக்கஸ்ஸலத்திற்கு செல்வது குறித்து நபியவர்களின் அறிவுரை யாது?
   a) அல்லாஹ்வின் சாபம் உண்டாகிறது
   b) அனுமதியுள்ளது
   c) இரண்டுமில்லை

3. உலகில் மோசமான இடம் என நபி(ஸல்) அவர்கள் எதனை கூறினார்கள்?
   a) திருவிழா கொண்டாடும் இடம்
   b) கடைவீதி
   c) அல்லாஹ்வை வணங்கப்படாத இடம்

4. இந்த சூரா திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதி என நபி(ஸல்) அவர்களால் கூறப்பட்டது
   a) சூராத்துல் யாஸீன்
   b) சூராத்துல் இக்லாஸ்
   c) சூராத்துல் பாத்திஹா

5. பெற்றோர் இன்றி பிறந்த நபி யார்?
   a) யூனுஸ்(அலை)
   b) ஆதம்(அலை)
   c) ஈஸா(அலை)

**அறிவுப் போட்டி - 7:2 க்கான பரிசு பெறுபவர் : முஹம்மது யூசுப்**
**059 713 5445**

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 7:2 க்கான விடைகள்

1) c) கதீஜா(ரலி)
2) b) தொழுகையை பற்றி
3) b) உமர்(ரலி)
4) c) தாவூத்(அலை)
5) b) சுலைமான்(அலை)

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 43 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ أَنْ تُبَارِكَ لِيْ فِيْ نَفْسِيْ، وَفِيْ سَمْعِيْ، وَفِيْ بَصَرِيْ، وَفِيْ رُوْحِيْ، وَفِيْ خَلْقِيْ، وَ فِيْ خُلُقِيْ، وَفِيْ أَهْلِيْ، وَفِيْ مَحْيَايَ، وَفِيْ مَمَاتِيْ، وَفِيْ عَمَلِيْ، فَتَقَبَّلْ حَسَنَاتِيْ، وَأَسْأَلُكَ الدَّرَجَاتِ الْعُلَى مِنَ الْجَنَّةِ. (المستدرك على الصحيحين)

யா அல்லாஹ்! என் ஆத்மாவிலும் என் கேள்விப்புலனிலும் என் பார்வையிலும்; என் உயிரிலும் என் உடலமைப்பிலும் என் குணத்திலும் என் குடும்பத்திலும் என் உயிர்வாழ்விலும் என்னுடைய மரணத்திலும் என்னுடைய அமல்களிலும் நீ அருள்புரியும்படி நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். ஆகவே, என்னுடைய நற்காரியங்களை நீ ஏற்றுக் கொள்வாயாக! (யா அல்லாஹ்!) சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்துக்களையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். (ஹாகிம்)

اَللَّهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ فَوَاتِحَ الْخَيْرِ وَخَوَاتِمَهُ وَجَوَامِعَهُ، وَأَوَّلَهُ وَآخِرَهُ، وَظَاهِرَهُ وَبَاطِنَهُ، وَالدَّرَجَاتِ الْعُلَى مِنَ الْجَنَّةِ. (المعجم الكبير للطبراني)

யா அல்லாஹ்! நன்மைகளின் ஆரம்பங்களையும் முடிவுகளையும் இன்னும் எல்லா நன்மைகளையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். நன்மைகளின் ஆரம்பம், முடிவு, அதன் வெளிப்படை, அந்தரங்கம் மற்றும் சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்துக்களையும் நான் உன்னிடம் கேட்கின்றேன். (தப்ரானி)